
௰ம	|||	ஆடி மீ 1௨

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(மாத வெளியீடு)



திருப்புகழ்த் தொண்டன்

கிருபானந்த வாரி

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
காங்கேயநல்லூர்.

G DARANS ENGRAVERS MADRAS

வருட சந்தா ரூ. 2-0-0.

20 JUL 1947
JL
[handwritten call number]
M43·84
189494

## பொருளடக்கம்.


திருப்புகழ்

| | | | |
|---|---|---|---|
| ஐந்துபூதமு | 73 | சென்னிமலைச் சிறப்பு | 86 |
| சிவாநந்தலஹரீ | 84 | கற்பு | 88 |

(கந்தரநுபூதி பின்னர் வரும்)



## திருமாகறல் திருப்பணி

இது தேவாரப் பாடல்பெற்ற திருத்தலம். அழகிய ஆலயம்; பழுதுபட்டுவிட்டது. இப்போது சீர்திருத்தம் செய்து வருகின்றது. இதற்கு உதவுவது மிகச் சிறந்த புண்ணியம். ஆதலின் அடியிற்கண்ட விலாசத்திற்கு அன்பர்கள் முடிந்த அளவு பொருள் அனுப்பி சிவபுண்ணியத்தில் பங்கு பெறுவார்களாக.

ஆதிநாராயண முதலியார்,
பட்டு ஜவுளி வியாபாரம்,
திருக்கச்சிநம்பி தெரு, சின்னகாஞ்சீபுரம்.

## பழநி ஆண்டவர்

முருகனடியார்களின் தமிழ் விசேஷ வெளியீடு.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான காரியாலயத்தினின்று மாதச் சிறப்புக்கள் தோறும் வெளிவருவது. தமிழ் மக்களின் தாய்மொழிப் பண்பையும், சமய உணர்ச்சியையும் பெருக்குவது. தமிழ் உலகத்தில் ஒவ்வொரு மக்கள் வீட்டிலும் உலவும் அரிய வெளியீடு.

தனிப்படி அஞ்சற்கூலி உள்பட அணா 0-2-9
ஆண்டுவரி அஞ்சற்கூலி உள்பட ரூ. 1-12-0.

## நேரு சந்தனத் தூள்.

நல்ல மணமும் குணமும் உடையது. பூஜா காலத்தில் தூபம் போடலாம். அன்பர்கள் யாவரும் வாங்கி உபயோகிக்கவும்.

சின்ன பாக்கட்டு 1 — 0-2-6.
பெரிய பாக்கட்டு 1 — 0-5-0.

ஜே. கே. எஸ். ஷா.
108 சாமிநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
சென்னையில் எல்லா வியாபார ஸ்தலங்களிலும் கிடைக்கும்.

உ
ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

| | | |
|---|---|---|
| மலர் 8. Vol 8. | சுபாநு ஹு ஆடி மீ 1உ ஜுலை 1943 | இதழ். 4. No 4. |

## திருப்புகழ்

### விராலிமலை.

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப

அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்

சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்

தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ

வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி

வன்கண் வீரிபி டாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய வயலூரா

வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முதுகுகல் முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே.

பதவுரை.

வந்த தானவர் சேனை கெடிபுக - போருக்கு வந்தடைந்த அசுர சேனைகள் புகழ்பெறவும், விபுதர் இந்த்ரலோகம் குடிபுக - தேவர்கள் பொன்னுலகத்தில் குடிபுகுந்து இன்புறவும், மண்டு பூத பசாசு பசிகெட - நெருங்கிய பூதங்களும் பைசாசங்களும் பசியாறவும், மயிடஅரி - மகிடாசுரனை வதைத்தவளும், வன்கண் வீரிபிடாரி - கொடியதொழிலும் வீரமும் உடையவளும் ஆகிய காளிதேவி, ஹரஹர சங்கரா என - அரஹரா! சங்கரா! என்று துதி செய்யவும், மேருகிரி தலை - மகாமேருகிரியின் உச்சியில், மண்டு தூள் எழ - நெருங்கிய புழுதி உண்டாகவும், வேலை உருவிய - வேலாயுதத்தை விடுத்தருளிய, வயலூரா - வயலூர் என்னுந் திருப்பதியில் எழுந்தருளி யுள்ளவரே! வெந்த நீறு அணி - நெருப்பால் வெந்த திருநீற்றைத் தரிக்கின்ற, இருடிகள் - மாமுனிவர்கள், பந்தபாச விகார பரவச - பந்த பாசத்தில் வசமாகும் தன்மையை, வென்றி ஆன - வெற்றிபெற்ற, சமாதி - சமாதி நிலையில், முதுகு கல் முழை கூடும் - முதிர்ந்த கற்குகையில் பொருந்தியுள்ள, விண்டுமேல் - மலையின்மேல், மயில் ஆட - மயில் ஆடவும், இனிய கள் உண்டு - இனியதேனைப் பருகி, கார் அளிபாட - கரிய வண்டுகள் பாடவும், இதழி - கொன்றை மரங்கள், பொன் விஞ்சவீசு - பொற்கட்டிகள் போன்ற மலர்களை மிகுதியாக வீசுகின்ற, விராலிமலை உறை - விராலிமலை யென்னுந் திருமலையில் வாழ்கின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! ஐந்துபூதமும் - மண் நீர் தீ காற்று விண் என்ற ஐம்பெரும் பூதங்களும், ஆறு சமயமும் - சைவம் வைணவம் காணாபத்தியம் கௌமாரம் சாத்தேயம் சௌரம் என்ற ஆறு சமயங்களும், மந்த்ர - மந்திரங்களும், வேத - வேதங்களும், புராண - பதினெண் புராணங்களும், கலைகளும் - அறுபத்துநான்கு கலைகளும், ஐம்பத்தோர் விதமான லிபிகளும் - ஐம்பத்தொரு வகை

யான எழுத்துக்களும், வெகுரூப – அநேக உருவங்களுடன் கூடிய, அண்டர் ஆதி – தேவர்கள் முதலிய, சர அசரமும் – அசை கின்ற உயிர்களும் அசையாத உயிர்களும் ஆகிய யாவும், உயர் புண்டரீகனும் – உயர்ந்த தாமரை-மலரில் வாழும் நான்முகக் கடவுளும், மேக நிறவனும் – நீருண்ட நீலமேகம் போன்ற வடிவுடைய நாராயணமூர்த்தியும், அந்திபோல் உருவானும் – அந்தி வானம்போன்ற செம்மேனியுடைய உருத்திர மூர்த்தியும், நிலவொடு வெயில் காலும் – நிலவுடன் வெயிலை வீசுகின்ற, சந்த்ர சூரியர் தாமும் – சந்திர சூரியரும், அசபையும் – அம்சமந்திரமும், விந்துநாதமும் – விந்துநாதமும், ஏக வடிவம் – ஒரே வடிவமாகும், அதன் சொரூபமது ஆக உறைவது – சுட்டறிவு அற்று எல்லாம் சிவவடிவாகக் காண்பதுவே, சிவயோகம் – சிவயோகமாம். தங்கள் ஆணவ மாயை கரும மலங்கள் போய் – தங்களுடைய ஆணவங் கன்மம் மாயை என்ற மும்மலங்கள் அறவே நீங்கப்பெற்று, உபதேச குருபர – உபதேசிக்கின்ற குருபரருடைய, சம்ப்ரதாயமொடு – தொன்றுதொட்டு வருகின்ற நியமத்துடன், ஏயும் நெறி அது – பொருந்துகின்ற வழியை, பெறுவேனோ – அடியேன் பெறக்கடவனோ?

## பொழிப்புரை.

போருக்கு வந்த அசுரசேனைகள் (வேற்படையால் அழியும் ஒரு சிறந்த) புகழைப் பெறவும், தேவர்கள் பொன்னாட்டில் குடிபுகுந்து இன்புறவும், நெருங்கிய பூதங்களும் பைசாசங்களும் பசியாறவும், மகிடாசுரனை யழித்தவளும் பயங்கரமான தொழிலை யுடையவளும் வீரத்தின் மிக்கவளுமாகிய காளிதேவி அஞ்சி, "அரஹரா! சங்கரா" என்று துதிசெய்யவும், மாமேருகிரியின் உச்சியில் மிகவும் புழுதி எழவும் வேற்படையை விடுத்தருளிய வயலூராண்டவரே! நெருப்பால் வெந்த திருநீற்றைத் தரிக்கின்ற மாமுனிவர்கள் பந்தபாச மாயா விகாரத்தினாலே தன் வசமற்றிருப்பதை வெல்லற்குக் காரணமான சமாதியை முதிர்ந்த கற்குகையின்கண் கூடுகின்ற மலையின்மேல், மயில்களாகிய நடனமாதர்கள் ஆடவும், இனிய கள்ளுண்டு கரிய வண்டுகளாகிய நட்டுவர் பாடவும், (அவ்

வாடலையும் பாடலையுங் கண்டுங் கேட்டும் உள்ளம் உவந்து) கொன்றை மரங்கள் மலர்கள் என்ற பொற் கட்டிகளை (பகுதியாகப் பரிசாக வீசி வழங்கவும், ஆகிய நலங்களுடன் கூடிய விராலிமலையின் கண் எழுந்தருளிய பெருமித முடையவரே! ஐந்துபூதங்களும், ஆறு சமயங் களும், மந்திரங்களும், வேதங்களும், புராணங்களும், கலை களும், ஐம்பத்தொரு வகையான அட்சரங்களும், தேவர் முதல் தாவரம் ஈருக உள்ள பலவித வடிவங்களையுடைய சர அசரங்களும், உயர்ந்த பிரமதேவனும், திருமாலும், உருத்திர மூர்த்தியும், நிலவையும் வெயிலையும் வீசுகின்ற சந்திர சூரியரும், அம்ச மந்திரமும், விந்துநாதமும் ஒரே வடிவந்தான்; வேறு வேறுகப் பிரித்து சுட்டியறிகின்ற அறிவு நீங்கி எல்லாம் சிவமாகப் பார்க்கின்ற அகண்டா கார நிலையில் நிலைத்திருப்பது சிவயோகமாகவும், ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் நீங்கி உபதேச குருபர சம்ப்ரதாயத்துடன் பொருந்தும் நன்னெறியை அடியேன் பெற்று உய்வேனே?

## விரிவுரை.

**ஐந்துபூதமும்:—**

மண், நீர், தீ, காற்று, வெளி என்பன.

**ஆறு சமயமும்:—**

சைவம், வைணவம், காணுபத்யம், கௌமாரம், சாக் தம், சௌரம் என்பன. இறைவனுடைய அருட்குணங் கள் ஆறனையும் தனித்தனியே தமக்குரியவாகக் கொள் வன.

**மந்த்ர:—**

மந் - நினைப்பு; திர - விடுவிப்பது; நினைப்பவரைப் பாவத்தினின்றும் விடுவிப்பது. அது ஏழு கோடிகளை யுடையது. நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வௌஷட், படீ, ஹூம்பட், என்பன.

**வேத:—**

இருக்கு, யஜுர், ஸாமம், அதர்வணம், என்பன. ஆயுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம், தநுர்வேதம் என்பன உபவேதங்களாம்.

**புராண:—**

புராணங்கள் பதினெட்டு.

சைவம், பௌஷ்யம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம் என்பன.

**ஐம்பதோர் விதமான லிபிகளும்:—**

ஆருதாரங்களில் அடங்கியுள்ள அகாராதி க்ஷகாராந்தமாகவுள்ள மாத்ருகா அட்சரங்கள்.

**அசபை:—**

உதடு அசையச் செய்வது ஜபம். உதடு அசையாமல் மானஸீகமாகச் செய்வது அஜபாநலம். அதனை ஹம்ஸ மந்திரம் என்பர்.

**ஏகவடிவம்:—**

சுட்டி யறிகின்ற அறிவு நீங்கி எல்லாம் சிவவடிவாகப் பார்த்தல்.

**சிவயோகம்:—**

யோகம் என்னும் சொல்லுக்குப் பொருந்துதல் என்று பொருள். பொருந்துதல் என்ற உடனே (1) பொருந்துகின்ற பொருள் எது? (2) எந்தப் பொருளோடு பொருந்த வேண்டும்? (3) பின் பொருந்துதற்குரிய காரணம் யாது? (4) முன் பொருந்தா திருந்தமைக்குக் காரணம் யாது? (5) ஒன்றை மற்றொன்றனோடு பொருத்துகின்ற உபகார சக்தி எது? (6) பொருந்தியபின் விளையும் பயன்

யாது? என்ற வினாக்கள் எழும். இவ்வினாக்கட்கு முறையே விடை பகர்கின்றாம்.

1. பொருந்துகின்ற பொருள் ஜீவான்மா;
2. பொருந்தப்படும் பொருள் பரமான்மா;
3. பின் பொருந்துதற்குரிய காரணம் பிரமானந்த வேட்கை;
4. முன் பொருந்தாதிருந்தமைக்குக் காரணம் ஆணவ மல மறைப்பு;
5. பொருத்துகின்ற பொருள் இறைவனொடு தாதான்மியப் பட்டு நிற்கும் அனுக்கிரகசக்தி;
6. பொருந்தியபின் விளைவது சிவானந்தம்.

ஒருத்தியும் ஒருவனும் கூடி யின்புறுவார்களானால், கூடுகின்ற மங்கையும், கூட்டப்படுகின்ற மணாளனும், அவள் அவனைக் கூடுதற்குரிய காமவேட்கையும், முன் அவனைக் கூடாதிருந்தமைக்குக் காரணம் அவனை அறியாமையும், அவனை அவளுடன் கூட்டிவைத்து உதவி புரிகின்ற தோழியும், கூடியபின் விளைகின்ற இன்பமும் போலென்றுணர்க.

இனி, அறிவற்ற பொருள் மற்றொரு அறிவற்ற பொருளுடன் கூடி இன்புறுவதில்லை. ஒரு மரப்பலகை ஒரு மாம்பழத்துடன் கலந்து அதன் மதுரத்தை யறியாது. அறிவற்ற பொருளாயினும் அறிவுடைய பொருளுடன் கூடுங்கால் அறிவுடைய பொருள் இன்புறும். ஒரு மாங் கனியை ஒரு மனிதன் நுகர்ந்து இன்புறுவன். ஆயினும் அல்ப இன்பமேயாம்; அதனினும் சிறந்தது அறிவுடைய பொருள் மற்றொரு அறிவுடைய பொருளுடன் கூடி இன் புறுவது. அறிவுடைய ஒருவனும் அறிவுடைய ஒருத்தியுங் கூடுகின்ற பொழுது மிகுந்த இன்பம் உண்டாகும். ஆயி னும் அவ்வின்பம், கணப்பொழுதில் மறைவதும், தூய்மை யில்லாததும், நோய் செய்வதும், வெறுக்கத் தக்கதுமாம்.

சிற்றறிவுடைய ஜீவான்மா பேரறிவுடைய பர மான்மாவோடு கூடுகின்றபொழுது, தெவிட்டாத பேரின்

பமும், அநுபவிக்க அநுபவிக்கக் குறையாத ஆனந்தமும், நிலைபேறான உண்மையின்பமும் உண்டாகும். ஆதலால், சீவன் சிவத்துடன் பொருந்துகின்றதே சிவயோகமாம். சிவனுடன் பொருந்துதல் எனப் பொருள்படும்.

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தைகளைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப் பொன்றுகண்டேன்
வட்டாகிச் செம்மதிப்பா லூறுலுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்ப மென்னை விழுங்கி இருக்கின்றதே
—பட்டினத்தடிகள்.

நிற்க; பிராணவாயுவை முறைப்படி ஒடுக்கி உள்ளத்தை ஒடுக்குவது ஒருமுறை; அதற்கு ஹடயோகம் என்றுபேர். அது குருவின்பால் முறையே கற்றுப் பயின்று செய்யத்தக்கதாம். மிகவும் அரிய சாதனம். அதனை தூல யோகம் என்னலாம். அதனை விடுத்து, சூக்கும முறையாக உள்ளத்தை ஒடுக்கி அவ்வழியே பிராணவாயு முதலியவற்றை ஒடுக்கி சிவத்துள் ஒடுங்குவதுவே சிவயோகம். அதுவே எளிது. ஒருபொருளை ஆழ்ந்து சிந்திக்கும்போது பிராணவாயு ஒடுங்குவது கண்கூடு; நாடோறும் சிவத்தையுன்னி சிந்தை முழுவதும் அப்பொருளிடம் வைத்து அசைவற்று சித்திரதீபம்போலிருக்கின் கருவிகரணங்கள் யாவும் ஒடுங்கும். அப்போது சிவவொளி நன்றாக வீசும். மலமறைப்பு அறவே நீங்கும். அவ்வழி சிவானந்தப் பெருவெள்ளம் பெருகி ஓடும்.

ஹடயோகத்தை அருணகிரி சுவாமிகள் மறுத்துரைக்குமாறு காண்க.

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாம்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முக்மாறுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங் கண்டீர் முத்தி கைகண்டதே.

சிவயோக முறையாக பிராணவாயுவை செம்மைப்படுத்துவதே செந்நெறியென தவயோகர் போற்றுஞ் சிவயோகச் செம்மலாகிய எமது திருமூலர் கருமூலங் கெடுமாறு கூறுமாறுகாண்க.

ஆரிய நல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவி னருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந்தானே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக் கறிவாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. —திருமந்திரம்.

கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே.
—தாயுமானர்.

யோகம் என்பதனைப் பலர் பலவாறு கூறினும் யாம் கூறும் சிவத்தொடு கலத்தலே பொருள் என்பதனை காசி காண்ட அருமை வாக்கா லறிக.

இந்திய விடயங் தன்னொடு சிவணல் யோகமென்பார்சிலர் சிலர்தஞ்
சிந்தனை யுயிரோ டடைத லல்யோக மென்பர் தன்றியுஞ் சிலர்தாம்
முந்திய பிராண னபானனோ டடைதலென்பரிம் மொழிந்தவை யனைத்து
மந்தமில் யோகமல்ல நற்சிவன் பரத்துட னடைவதே யோகம்.

**வெந்தநீறணி வேணி யிருடியர்:—**

விராலிமலையில் குகைகளில் முனிவர்கள் சமாதி நிலையில் உறைகின்றனர். அவர்கள் திருநீறு தரித்து விளங்குகின்றனர். அத்திருநீற்றின் அளவிடற்கரிய பெருமையைச் சிறிது கூறுதும்.

திருநீறு

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.

திருநீறு, பசிதம், இரட்சை, விபூதியெனப் பல நாமங்கள் பெற்று விளங்கும். தீவினைகள் அனைத்தையும் நீற்றி

விடலால் திருநீறு; அறியாமையை யகற்றி சிவசோதி யைத் தரலால் பசிதம்; பேய் பூதம் வேதாளம் ஏவல் பில்லி சூனியம் துர்த்தேவர்கள் பயம் பழிபாவம் நோய் ஆகிய தீமைகளினின்றுங் காப்பதனுல் இரட்சை; அள வற்ற செல்வத்தைத் தருதலால் விபூதி; எனப் பெயர் பெறும்.

இருப்புக்கவசம் பூண்டவனுக்கு ஆயுதங்களின் துன் பம் நேராது. அதுபோல், திருநீறு என்ற வஜ்ரகவசம் பூண்டார்க்கு யாதொரு இடரும் எய்தாது. வினைநீங்கி வீடுபெறுவர்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளும் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே

—திருமூலர்.

திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம் எனமூ வகைப்படும்.

அவற்றுள் கற்பம்:—

கன்றுபோடாதது, மலடு, இளங்கன்றுடையது, கரு வுற்றது, முதிர்ந்த கன்றுடையது, அங்கப்பழுதுடையது ஆகிய பசுக்களை நீக்கி, நல்ல அழகுடைய சிறந்த கன் ேறாடு கூடிய பசுவை பங்குனி மாதத்தில் நெல்லறுத்த வயலில் மேயவிட்டு, அப் பசு விடுகின்ற கோமய (சாண) த்தை அட்டமி சதுர்த்தசி, அமாவாசை பௌர்ணமி ஆகிய நாள்களில், காலை நீராடி சிவபூஜை முதலியன செய்து, சாணம் கீழே விழாமற்படிக்கு, தாமரை, பலா சம், வாழை ஆகிய இலைகளில் ஏதாவதொன்றில், சத்யோ ஜாத மந்திரஞ் சொல்லி ஏறகவேண்டும். மேல் வழும்பினை எடுத்துவிட்டு, வாமதேவ மந்திரஞ் சொல்லி பஞ்சகவ்யம் விட்டு, அகோர மந்திரஞ் சொல்லி பிசைந்து, தற்புருட மந்திரஞ் சொல்லி உருண்டை செய்தல் வேண்டும். ஓமத்தீ மூட்டி பதடியுடன் சேர்த்து சுட்டு, நல்லபதத்தில் ஈசான மந்திரஞ் சொல்லி எடுத்து, புதிய ஆடையில் வடிகட்டி, பொன், வெள்ளி, தாம்பிரம் ஆகிய பாத்திரம் உத்தமம், மத்திமம், அதமம். இன்றேல் புதியமண், பித்தளை, சுண்ண ஆகிய பாத்திரங்களிலும் வைக்கலாம். அவ்வாறு வைக் கும்போது அத்திருநீற்றை சிவபெருமானுடைய திரு

வுருவமாக எண்ணி பஞ்சப் பிரமமந்திரமும் சடங்க மந்திரமும் சொல்லி. அவற்றுடன் சண்பகம், தாழை பலாசம் புன்னாகம் தாமரை துளசி பாதிரி பச்சைகற்பூரம் வெட்டிவேர் மரு விலாமிச்சம வேர் மல்லிகை தக்கோலம், நாயுருவி தருப்பையின் நுனி முதலியவற்றை விபூதியில் விட்டு, மலர் சூட்டி வெண் துகிலைவ் வாய்கட்டி, காயத்திரி மந்திரஞ் ஜெபித்து, கவசமும் அவகுண்டனமும் செய்து, அஸ்திரமந்திரஞ் சொல்லி தேனுமுத்திரைகாட்டி பத்திரப்படுத்துதல வேண்டும். அதில் வேண்டியபோது சிவமந்திரஞ் சொல்லி எடுத்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

அநு கற்பம்:—

சித்திரை மாதத்தில் காட்டிற்குச் சென்று அங்குள்ள பசுவின் உலர்ந்த கோமய (சாணத)தைக் கொண்டுவந்து இடித்து பஞ்சகவ்வியம் விட்டு முன் கூறிய முறைப்படி நீற்றி எடுக்கவேண்டும்.

உபகற்பம்:—

காட்டுத் தீயால் வெந்த நீற்றைக் கொணர்ந்து இடித்து கோநீர்விட்டுப் பிசைந்து முன் கூறிய முறைப்படி நீற்றி எடுத்து வைக்கவேண்டும். இனி கற்பம் என்றும் ஒருவகை உண்டு. அது உபகற்பத்தின் சிறு பிரிவாம்.

சர்வ சங்கார காலத்தில் சிவபெருமான் மூவரையும், தேவரையும் நெற்றிக்கண்ணால் எரித்து அம்மயானத்தில் நடித்தனர். அப்பொழுது அவருடைய அருள் திருமேனியில அந்நீறு முழுவதும் படிந்தன. அதனை சிவபெருமான் திருக்கரத்தால் வழித்து எறிந்தனர். அதனை இடபதேவர் உண்டு தன் வீரியத்தை பசுக்கள்பால் விடுத்தனர். அதனாலும், தேவர்கள் யாவரும் பசுவின் உடம்பில் வசிப்பதாகும். பசுவின் சாணத்தை எரித்த நீறு மிகவும் புனிதம் பெற்றது.

அத்திருநீற்றை ஒரு கரத்தில் வாங்குதலும், தலை கவிழ்ந்து பூசுதலும் குற்றம். இனி திரிபுண்டரமாக அணிகின்ற விதியை தத்தம் குருமூர்த்தியிடம் கேட்டுத் தெளிக. சென்னியில் அணிவதால் கழுத்துவரை செய்த பாபங்கள் தீரும். மார்பில் அணிவதால் உள்ளத்தால் செய்த பாவம் தீரும். கரத்தில் அணிவதால் கரத்தால்

செய்யும் பாவங்கள் தீரும். முழந்தாளில் அணிவதால் கால்களால் செய்யும் பாவங்கள் தீரும். இங்ஙனம் திருநீறு எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது. மிகுந்த பாவம் செய்தவற்கு திருநீற்றில் வெறுப்பு உண்டாகும். திருநீறு இடாதவரைக் கண்டு பெரியவர்கள் அஞ்சுகின்றனர்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினே டிறப்புமஞ்சேன்
துணிநிலா அணியினான்றன் தொழும்பரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்து காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநா மஞ்சுமாறே.

—மாணிக்கவாசகர்.

போற்ற நீறிடாப் புலையரைக் கண்டால் போக போகநீர் புலமிழந்தவமே
நீற்றின் மேனியர் தங்களைக் கண்டால் நிற்க நிற்கவந் நிமலரைக் காண்க
சாற்றி னன்னெறி யிதுகாண் கண்காள் தமனியப் பெருந்தனுவெடுத்
தெயிலைக்
காற்றி நின்றனங் கண்ணுதற் கரும்பைக் கயிலையாளனைக் காணுதற்
பொருட்டே

—இராமலிங்க அடிகள்.

திருநீறணியாது செய்யும் தான தருமங்களாலும், விரதங்களாலும், தவங்களாலும் ஒருபோதும் பலன் அடையார். ஆதலால் திருநீற்றை ஒவ்வொருவரும் அன்புடன் அணிதல் வேண்டும்.

"பகர்புனித நீறணியார் ஞானமடையார் கோடி பவமாறு லுந்
தகர்தலுறார் சமுசார மாபாவ முடையராய்த் தாழ்வார் கும்பி
புகரில்வரு ஞசிரம பலமுமுறு ரவரியற்றும் புனித மான
நிகரரிய புண்ணியமும் பாதகமா மென்றுமறை நிகழ்த்து
மாலோ"

சிவநாமத்தைக் கூறி திருநீறிட்டார் நிச்சயமாக சிவகதி பெறுவர். "திருவாய்ப் பொலிய சிவாயநம வென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி" என்று அப்பமூர்த்திகள் கூறுகின்ற அருமையை யுன்னுமின், "சுந்தரமாவது நீறு" "கவினைத் தருவது நீறு" என்ற திருவாக்குகளையும் உய்த்துணர்மின்; மேல்நாட்டாரும் இன்று அழகு செய்ய வெண் பொடியை முகத்திற் பூசி யுவக்கின்றன ரன்றோ? சிவப்பொடி பூசிற் பவப்பொடி யாகும். சிவநாமத்தைக் கூறி திருநீறிட்டார்க்கு [illegible] பதங்களாலும் நோய்களாலும் துன்பம் [illegible] என்பது [illegible] இன்றைக்குங் கண்கூடாகக் காண [illegible]. "நீறில்லா [illegible]றிபாழ்" என்ற

உ

ஓம் குஹாய நம:

# சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(36-வது பக்கத் தொடர்ச்சி)

(99) இத3ம் தே யுக்தம் வா பரமசிவ காருண்ய ஜலதே4
க3தௌ திர்யக்3 ரூபம் தவ ப3தசிரோ த3ர்சன தி4யா!
ஹரிப்ரஹ்மாணௌ தௌ தி3வி பு4வி சரந்தௌ ச்ரமயுதௌ
க3தம் சம்போ4 ஸ்வாமின் கத2ய மம வேத்3யோஸி புரத:॥

---

தமிழன்னையின் அமிழ்ந்த வுரையும் நினைமின். அன்பர்கள் அனைவரும் அன்புடன் அரனாமங் கூறி திருநீறிட்டு வினைகளை வேரோடு களைந்து இருமை நலன்களை எளிதிற் பெறுவார்களாக.

விண்டுமேல் மயிலாட........போன் விந்தைகள்:—

அருணகிரியார் இயற்கைக் காட்சியில் நம்மை ஈடுபடுத்துகின்றனர். விராலிமலையில் எந்நேரமும் ஒரு நடனக் கச்சேரி நடக்கின்றது. நடனமாடுகின்ற பெண் மயில்; பின்னே பாடி அவளை நடிக்கச் செய்கின்ற நட்டுவனார் வண்டு; அந்நடனத்தைக் கண்டு கொன்றைமரம் என்ற தனவந்தன் தனது மலர்களாகிய பொற்கட்டிகளை அலட்சியமாக அப்படி வீசுகின்றது. என்ன அழகு?

இவ்வண்ணமே எமது ஞானசம்பந்தப் பெருந்தகையாருங் கூறுமாறு காண்க.

*வரை சேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட*
*விரை சேர்பொன் னிதழிதர மென்காந்தள் கையேற்கு*
*மிழலையாமே*

### கருத்துரை.

அசுரரை யழிக்க வேல் விடுத்தருளிய வயலூராண்டவரே! விராலிமலையுறை [illegible] எல்லாம் சிவவடிவாகப் பார்த்து சிவயோகத்தில் நிலைபெற்ற [illegible] குரு பரம்பரையோடு சேர அருள்புரிவீர்.

## பதவுரை

பரமசிவ — பரமசிவமே!
காருண்ய ஜலதே — கருணைக்கடலே
தவ — தேவரீருடைய
பதசிரோ தர்சனர்தியா — திருவடியையும் முடியையுங் காணவேண்டுமென்ற புத்தியினால்
திர்யக்ரூபம் — கீழான (பன்றி அன்ன) உருவத்தை
கதௌ — அடைந்தவர்களான
தௌ — அந்த அவ்வித மேன்மை பொருந்திய
ஹரிப்ரஹ்மாணௌ — திருமால், பிரமன் (ஆகிய இருவரும்)
திவி — விண்ணிலும்
புவி — மண்ணிலும்
சரந்தௌ — சஞ்சரிக்கின்றவர்களாகி
ச்ரமயுதௌ — துன்பத்தை யடைந்தார்கள் (ஆதலால்)
சம்போ — சுககாரணரே!
ஸ்வாமின் — உடையவரே!
மம — அடியேனுடைய
புரதௌ — முன்பாக
கதம் — எவ்விதம்
வேத்ய: — அறியத்தக்கவராக
அஸி — ஆகின்றீர்?
கதய — சொல்லும்
இதம் — இச்செயல்
தே — உமக்கு
யுக்தம்வா — தகுந்ததுதானா?

## பொழிப்புரை.

ஓ கருணைக்கடலே! உமது அடிமுடிகளைக் காணவேண்டுமென்று, கீழான குறுக்கு வடிவங்களான பன்றியும் அன்னமுமாகி, மாலும் அயனும் மண்ணிலும் விண்ணிலும் சென்று துன்புற்றார்கள். அவர்களால் காணுதற்கரிய தேவரீர் அடியேனுக்குத் தெரியுமாறு எவ்வாறு தோன்றுகின்றீர்? இது உமக்குத் தகுதியோ? கூறியருளும்.

உ

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

## "சென்னிமலைச் சிறப்பு"

(66-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்திய ஞானி என்னும் தவமுனிவர் தலயாத்திரை செய்து கொண்டு வந்தனர். அஷ்டமா சித்திகளும் பொருந்திய அவர் சென்னிமலைச் சாரலை யடைந்தனர். அம்மலையின் உச்சியில் ஓர் சோதி தோன்றியது; அதனை அவர் கண்டு, தான் வழிபடும் சத்தியைத் தியானித்து அத் தாணுவை நோக்கினர்.

அருந்துமா ரமுத மோர்பால் அருந்தவ முனிவ ரோர்பால்
திருந்துதா பதர்க ளோர்பால் சித்தவித் யாத ரோர்பால்
வருந்திடா திருக்குந் தெய்வ வாலகில் லியர்க ளோர்பால்
சொரிந்து நெய் வேள்வி யாற்றுஞ் சுருதியோ ரொருபால்
வைகும்.

செந்துயி ரனைத்துய்க் குஞ்சஞ் சீவினி யொருபாற் றுண்டஞ்
சந்துசெய் துறுப்புக் கூட்டுஞ் சந்தான கரணி யோர்பால்
உந்துமம் பிறப்புத் தீர்க்கும் சல்லிய கரணி யோர்பால்
நந்துரு விரணந் தீர்க்குஞ் சமான நன் கரணியோர்பால்

மூப்புவெம் பிணிசாக்காடு முதலன தீர்க்குங் கைப்பு
யாப்புறு தலைத்தி ரெட்டி யருங்கரு நொச்சி யோர்பால்
பாப்பினுட் சுதைவெண் சாரைப் பாப்பின மோர்பா லப்பால்
காப்புறு மருந்தி னீட்டங் கணக்கிலை குணிக்கற் பாற்றே.

திருக்கிளர் திருவைமல்குந் தெய்வவைந் தருக்க ளோர்பால்
பெருக்குமா மகத்திற் பொங்கிப் பெருகிடுந் தீர்த்த மோர்பால்
பொருக்கெனக் கண்டுகாறு திருக்குமோர் பொய்கை யோர்பால்
பருப்பதச் சிகரக் குன்றின் பான்மையா ரளக்க வல்லரர்.

இத்தகைய சிறப்புக்களுடன் விளங்கும் சென்னிமலையைக் கண்டு அதியற்புத மடைந்த சத்திய ஞானியார், ஆங்கொரு குகையின்கண் பதுமாசனமிட் டமர்ந்து, உமாதேவியாரை யுன்னி தவஞ் செய்வாராயினர். சில காலத்திற்குப் பின் தவாக்கினி எழுந்து அக்குகையினின்றுங் கிளம்பி செல்வத்தைக் கண்ட ஏழைகள்போல், திருக்

கைலாய மலையில் உமையம்மையார் திருக்கோயிலின் நுழைந்தது. அது கண்ட அம்பிகை தன்னை நோக்கித் தவஞ் செய்யும் சத்திய ஞானியின் தவாக்கினி யென்று எண்ணி "அவனுக்கு இனி யருள்புரிவோம்" என்று திருவுளம் பற்றி யருளினர்.

அதே சமயத்தில் திருக்கயிலைமலையில், பிருங்கி என்ற முனிவர் அம்பிகையை நீக்கி சம்புவை மட்டும் வணங்கினர். அதுகண்டு அம்பிகை பிருங்கியினுடைய தசை மூளை உதிரம் ஆற்றல் ஆகியவைகளைக் கவர்ந்து விட்டனர். அதனால் பிருங்கி எலும்புக்கூடாக வலிகுன்றி அவசமுற்று சிவபெருமானை நினைந்து வீழ்ந்தனர். சிவபிரான் அவருக்கு மூன்றாவது காலைக் கொடுத்தனர். அதுகண்டு உமாதேவியார் "நம்மைப் புறக்கணித்தவனுக்கு இறைவர் அருள் புரிந்தமையால் இனி நம்மை மதிப்பவர் யாவர்? அதனால் இங்கிருத்தல் தகாது; நம்மை மதித்து சென்னிமலையில் தவம்புரியும் சத்தியஞானிக்கு அருள்புரியவும், இறைவருடைய இடப்பாகம் பெறவும் இது நல்ல சமயம்" என்று எண்ணி, விநாயகரும் வேலவரும் இருமருங்கு வர தாதியருடன் புறப்பட்டு கைலையை நீங்கி சென்னிமலைக்கு வருவாராயினர்.

அங்ஙனம் வருங்காலை தேவர்கள் வந்து பிராட்டியாரை அன்புடன் பணிந்து.

பங்கயத் துறையும் பொன்னும் பாரதி மின்னும் போற்றும்
அங்கயற் கண்ணி யம்மே சும்ப நிசும்பனாதி
வெங்கய வீரர் தன்பால் வெருவினேம் நின்னையல்லால்
எங்கய லடைவே மன்னாய் எம்மையாண் டருடி யென்றார்.

"அன்னையே! சும்பன் நிசும்பன் என்னும் அசுரர்களால் நாங்கள் கற்பகாடிழந்து கவலையுறுகிறோம். அவர்களை யழித்து ஆண்டருளும்" என்று முறையிட்டனர். தேவி திருவருள் புரிந்து "அங்ஙனமே யாகுக" என்று கூறியருளி, சென்னிமலையை யடைந்து சத்தியஞானி தவம் புரியும் குகையை யடைந்தனர். சதகோடி வெண்மதி போலக் கருணைவெள்ளம் பொழியுங் கமலமுகத்துடன் காட்சிதந்த கற்பகவல்லியைக் கண்ட சத்தியஞானி, அளவற்ற மகிழ்ச்சியை யடைந்து எழுந்து அம்மையின் அடிமலர்மீது வீழ்ந்து, கண்ணீர்மல்கி உள்ளங்கசிந்து, ஆனந்தக் கூத்தாடினர்; என்புருகிப் பாடினர்.

முருகா

# கற்பு.

கமலபுரம் ஒரு அழகிய நகரம். வானளாவிய மதில்களாலும், ஆழ்ந்த அகழியாலும், வண்டறு மலர்ச்சோலைகளாலும் சூழப் பெற்றது. பல கோயில்களும், அறச்சாலைகளும், கல்விக்கழகங்களும், காட்சி நிலையங்களும் ஆங்காங்கு சிறப்புடன் விளங்கிக் கொண்டிருந்தன. அரமடந்தையர் நாண வரமடந்தையர் ஆடலும் பாடலும் எப்போதும் அந்நகரில் நிகழ்ந்து கொண்டிருக்கும். இத்தகைய நகரை தர்மவர்மன் என்ற அரசர்பெருமான் அறநெறி வழுவாது அரசுபுரிந்து வந்தார். அவருடைய அருந்தவப் பயனாக ஓர் செல்வப்புதல்வி பிறந்திருந்தாள். வேறு ஆண் சந்ததியில்லை. அவள் பேர் கமலக்கண்ணி. திருமகள்போல் இகழ்ந்தனள். கல்வியறிவு நிரம்பப் பெற்றனள். அவள் ஒருநாள் அரண்மனைப் பூங்காவனத்துள்ள தாமரைத் தடாகத்தில் தோழிகளுடன் நீராடுதற்குச் சென்றனள்.

கமலக்கண்ணி:— தோழிகளே! இந்தத் தாமரைத் தடாகம் எவ்வளவு அழகாக இருக்கின்றது பாருங்கள்;

"பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியது இப்போது நினைவுக்கு வருகின்றது. இக்குளத்தில் இயற்கையன்னை இனிது தாண்டவமாடுகின்றனள்.

---

முததொழிற் கிறைவி போற்று முதுமறைக் கிளவி போற்றி
சித்துவிற் சித்து போற்றி தேடொணாப் பொருளே போற்றி
சத்துவ குண நீ போற்றி சதானந்த ரூபி போற்றி
அத்திமுன் னெறும்பீறாக அனைத்துயிர்க் குயிரே போற்றி.

என்று துதித்தனர். அம்பிகை அவருக்கு அருள்புரிந்து சென்னிமலைக்கு அடுத்த வனத்தில் எழுந்தருளினர். (அது இப்போது பிராட்டியூர் என்று வழங்குகின்றது) சென்னிமலையில் செங்கிமலையின் இருக்குமாரராகிய செவ்வேட்பரமன் எழுந்தருளினர். தேவரும் மூவரும் போற்றி செய்து எந்தை கந்தவேள் திருவருளைப் பெற்றனர்.

(தொடரும்)

தோழி:— அம்மா! இத்தாமரை உனது முகத்தைக் காட்டுகின்றது. இக்குளத்தின் ஆழமும் தெளிவும் உன் அறிவின் ஆழத்தையும் தெளிவையும் காட்டுகின்றன. தாமரையின் தண்டு தண்ணீருக்குத் தக்கவாறு நீள்வது பொன்கொடுப்பதற்குத் தக்கவாறு நேயஞ் செய்யும் விலைமகளிரது நட்பைக் காட்டுகின்றது. கொடிப்பாசிகள் நின் கூந்தலைக் காட்டுகின்றன.

கமல:— தோழிகளே! உங்கள் உவமச்சுவைகள் நன்ருக இருக்கின்றன; இதில் முழுகுவோம்.

எல்லோரும் தடாகத்தில் இறங்கிக் குளிப்பாராயினார்கள். கமலக்கண்ணி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி நீர்விளையாட்டில் ஈடுபட்டாள். கொடிய முதலை ஒன்று கஜேந்திரனைப் பிடித்தது போல் கமலக்கண்ணியின் தாளைப்பற்றி இழுத்தது. கமலக்கண்ணி ஓ என்று அலறினாள். தோழிகள் கரையேறி கல்லுங் கட்டியும் எடுத்து முதலைமீது எறிந்தனர். எறிய எறிய முதலை தண்ணீரின் ஆழத்துக்கே இழுக்கலுற்றது. கமலக்கண்ணி "முருகா! முருகா! என்று கதறினாள். அக்குரலைக் கேட்டு கஜேந்திரன்முன் கருடன்மீது வந்து சேர்த்த திருமாலைப்போல், ஒரு இளம்வீரபுருடன் வில்லம்புடன் வந்து "ஆரணங்கே! அஞ்சற்க" என்று கூறி, தன் வில்லை வளைத்து ஒரு கூரிய கணையை எடுத்து விடுத்து முதலையைப் பிளந்தனன். எமன்வாயிலிருந்து விடுபட்டதுபோல் கமலக்கண்ணி விடுபட்டனள். கரையேறி தன்னைக் காப்பாற்றிய கட்டழகனைக் கண்டு கண்குளிர்ந்தனள். அவள் கண்கள் இமைக்குந் தொழிலை சில நிமிஷங்கள் மறந்துவிட்டன. கந்தக்கடவுளே இவ்வுருவுடன் வந்திருப்பதாக எண்ணினாள். நாணத்தால் தலைகுனிந்து நின்றனள். தோழிகளைக் குறிப்பாகப் பார்த்தனள். அக்குறிப்பினை யறிந்த தோழியர் அவ்விளவீரனைப் பணிந்து "காமனை யொத்த கட்டிளங்குமரரே! தாங்கள் யார்? தங்கள் திருப்பெயர் யாது? எமது அரசகுமாரிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காப்பாற்றினீர். உமக்கு எமது நன்றி என்றென்றைக்கும் உரியதாகுக." என்று வினவினார்கள்.

இளவீரன் "பெண்மணிகளே! நான் ஒரு போர்வீரனுடைய மகன். என் பெயர் கலைவாணன். இக்கட்டழகி யாவள்?" என்றனன். தோழிகள் "கலைவாணரே! இம்மாதரசி நமது மன்னர் பெருமானுடைய அருந்தவப் புதல்வி. இவள் பெயர் கமலக்கண்ணி. நாங்கள் நீர்விளையாட வந்தோம். எங்களுக்குற்ற பேரா

பத்தை நீக்கியருளினீர். உமக்கு எமது வந்தனம்" என்றார்கள். கமலக்கண்ணியின் கண்களும் கலைவாணன் கண்களும் ஏதேதோ பேசிக்கொண்டன. கமலக்கண்ணியின் கண்களினின்றும் வீசிய ஒளி அவனை யீர்த்தது. கமலக்கண்ணியின் உள்ளம் உருகியது. கலைவாணன் தன்னை மறந்து தடுமாறினன். கமலக்கண்ணி அவனைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே அரண்மனைக்குத் திரும்பினள். கலைவாணனும் உள்ளத்தை அவளிடம் பதித்து விட்டு வெறும் உடம்புடன் தன் இருக்கை புக்கான்.

கமலக்கண்ணி:- "ஓ மனமே! கலைவாணரைக் கணவராக நான் பெறுவேனோ? அவரைக் கண்ட நிமிஷத்திலிருந்து எனக்கு வேறு எதனையுங் காண விருப்பமில்லை. நீ அவரை அழைத்துவர மாட்டாயோ? அவரை நான் விரும்புவதுபோல் அவர் என்னை விரும்புவாரா? அவருக்கு ஒருவேளை திருமணம் ஆயிருந்தால் என்ன செய்வது? இனி அவரைத் தவிர நான் ஒருவரையும் கை தொடேன். இந்தப் பிறப்பில் அவர் எனக்குக் கணவனாகும் பாக்கியம் இல்லாதொழியின் மறுபிறப்பிலாவது அதனைப் பெறுவேன்" என்று தனக்குள் புலம்புவாள்.

கலைவாணன்:- நெஞ்சமே! நீ என்ன சிறிதும் அறிவில்லாமல் தவிக்கின்றனை. அவளோ அரசன் மகள்; நீயோ ஒரு போர்வீரன் மகன். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமைபோல் அவளுக்கும் உனக்கும் தாரதம்மியம் உண்டு. நீ அவளை மறந்துவிடு. "கிட்டாதாயின் வெட்டென மற". மறுபிறப்பில் அவளை மனைவியாகப் பெறுவாயாக. அவளை நீ மறுமுறை சந்திக்கும் பாக்கியமாவது கிடைத்தாலும் போதும். என்று உருகினன்.

கமலபுரியின் மன்னராகிய தர்மவர்மர் ஒருநாள் தன் மந்திரியை நோக்கி, "மந்திரி! எனக்கு ஆண்மகவு இல்லை. எனக்குப் பிறகு நீதி தவறாமல் நமது நாட்டைப் பரிபாலிக்க ஒரு சிறந்த செம்மலைத் தேடி அவனுக்கு எனது அருந்தவப் புதல்வி கமலக் கண்ணியை கன்னிகாதானமாகக் கொடுத்து அரசையுங் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறேன். நற்குண மமைந்த ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றனர். மந்திரி, "அரசே! நமது புதல்விக்கு நல்ல மணமகனைத் தேடவேண்டுமென்று எனக்குப் பலநாள்களாகக் கவலையுண்டு. அதுபற்றி நான் ஆராய்ந்து சிந்திக்கின்றேன்" என்றனன்.

மந்திரி தனக்குள் சிந்திப்பான். "அரசருக்கு ஒரேபெண். பெண்ணைக்கொடுத்து அரசையுந் தருவதாகத் தீர்மானித் திருக்-

கின்றார். நமக்கு ஒருமகன் இருக்கின்றான். ஆனால் அவனுக்கு அறிவு சிறிது குறைவு. எனினும் எப்படியாவது நமது மகனுக்கு அரசன் மகளைக் கல்யாணம் செய்துவைத்து அரச பதவியை யடையவேண்டும்'' என்று எண்ணினான்.

ஒருநாள் தர்மவர்மர் மந்திரியை அழைத்து ''மந்திரி! மண மகன் விஷயம் யாது'' என்று கேட்டார். மந்திரி ''வேந்தர் பெருமானே! அதுபற்றி நான் பெரிதும் முயன்று தேடினேன். எத்தனையோ அரசகுமாரர்களைப் பார்த்தேன். கல்வி யிருந்தால் அழகில்லை. அழகிருந்தால் அறிவில்லை. இரண்டுமிருந்தால் அடக்கமில்லை. மூன்றுமிருந்தால் ஒழுக்கமில்லை. ஏதாவது குறையிருக்கின்றது. எனக்கு ஒரு மகன் இருக்கின்றான். கூடுமானவரை பொருத்தமானவன். அவ்விடத்திற்கு உடன்பாடாயின் அதனை முடிவு செய்யலாம் என்றான். அரசன் ''ஆலோசிப்போம்'' என்றான்.

பின்னர் மன்னர் தனது மகளை யழைத்து, ''அம்மா! என் செல்வக் குழந்தாய்! உனக்கு மணஞ்செய்யக் கருதி யிருக்கிறேன். உன்னை மணந்துகொள்பவனுக்கு அரசபதவியைத் தருவதாக முடிவு செய்துளேன். அதற்கு தக்க வரன் கிடைக்கவில்லை. மந்திரி தன் மகன் தகுந்தவன் என்று கூறுகின்றனன். நின் சம்மதம் யாது?'' என்று கேட்டனர். கமலக்கண்ணி பிதாவைத் தொழுது ''என் அருமைப் பிதாவே! நான் அழியாத கற்பு என்னும் அணிகலத்தைப் பூண்டவள். என் மனக்கோயிலில் வேறு ஒரு உத்தம விக்கிரகம் பிரதிஷ்டையாய் விட்டது. இனி அங்கு வேறு யாருக்கும் இடமில்லை. நான் ஒருநாள் நமது தாமரைத் தடாகத்தில் நீராடினேன். ஒரு முதலை என்னைப் பற்றிக்கொண்டது. ஓவென்றலறினேன். ஒரு போர் வீரனுடைய புதல்வர் கலைவாணன் என்பவர் முதலையைக் கொன்று எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தனர். அதுமுதல் அவரே எனக்குக் கணவன் என்று நாடியிருக்கிறேன். தாங்கள் அவருக்கு என்னை வாழ்க்கைத் துணைவியாக்கி வைக்குமாறு வேண்டுகிறேன்'' என்றாள். தர்மவர்மர் ''அம்மா! போர்வீரன் மகன் என்றால் உன்னுடைய தகுதிக்குத் தக்கவனாகான். மந்திரி நமது நலத்தை விரும்புபவன். அவன் மகன் உனக்குத் தக்க கணவன் என்று எண்ணுகிறேன். நீ அதற்கு இசைந்து அவனை மணந்துகொள்'' என்றார். கமலக்கண்ணி ''எந்தையே! ஒருவரை மனத்தால் வரித்தபின் மற்றொருவரை மணப்பது பெண்ணியலாகாது. அது கற்பின் மாண்பைக் கெடுக்

கும். தாங்கள் கலைவாணருக்கு என்னைத் தருவது தகுதியன்றென்று கருதினால் நான் ஒருவரையும் மணந்துகொள்ளாமல் கன்னியாகவே இருப்பேன்; இல்லையேல் இறப்பேன்; கற்பு நெறி கடந்து வாழமாட்டேன்'' என்றாள்.

அரசர் அமைச்சனை யழைத்து தனியிடத்தில் இருத்தி, "மந்திரியே! நின் மகனை மணக்க என்மகள் இசைந்திலள். போர்வீரன் மகன் கலைவாணன் என்பவனிடம் காதல் கொண்டிருக்கின்றனளாம். ஆதலின் அவள் மனத்திற்கு மாறாகச் செய்ய எனக்கு இஷ்டமில்லை. இருவருள்போல எல்லாம் நடக்கட்டும்'' என்று கூறிவிட்டான்.

மதியற்ற மந்திரி தனித்திருந்து சதியாலோசனை செய்யலானான். நமது மைந்தனுக்கு எப்படியும் அரசன் மகளை மணந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நமக்கு அரசும் ஆட்சியும் கிடைக்கும். ஆனால் அதற்குத் தடையாகக் கலைவாணன் நிற்கின்றான். அவனைக் கொன்றாலன்றி இந்தக் காரியம் நிறைவேறாது. ஆனால் அவனை நாம் கொல்வோமாயினை, அரசன் நம்மீது சந்தேகமுற்று நம்மைக் கொன்றாலும் கொல்வன். ம்...... சரி. ஏன்? அரசனையே முதலில் கொன்றுவிட்டால், பிறகு சுலபமாகக் கலைவாணனைக் கொன்றுவிடலாம். பிறகு நாம் இட்டது சட்டந்தான். நமது மகனுக்கும் கமலக்கண்ணிக்கும் மணஞ்செய்து நமது மகனை அரசனாக்கிவிடலாம். நாம் எண்ணியபடி விரைவில் செய்து முடிப்போம். என்று பாவியாகிய அவன் இக்கொடிய சிந்தனையைச் செய்தான்.

கமலக்கண்ணி ஒரு கடிதம் எழுதி தன் உயிர்த்தோழியிடம் தந்து கலைவாணனிடம் அனுப்பினாள். அக்கடிதத்தைப் பாங்கி கலைவாணனிடம் கொடுத்து மீண்டனள். கலைவாணன் அதனை வாங்கிப் படித்தனன்.

"அன்புமிக்க ஆர்வல! என்னெஞ்சில் இமைப்போதும் நீங்காமல் நிலைபெற்று நிற்கின்றனை. அன்று என்னை முதலைவாயினின்று மீட்டு தடாகத்தினின்றுங் கரையேற்றியதுபோல், மதனன் என்ற முதலையை வாட்டி வேட்கை என்ற கடலினின்றும் கரையேற்றி வைப்பாய் என்று ஏங்கி இருக்கிறேன். நின்னை மணக்கும் விஷயமாக என் பிதாவிடம் கூறியிருக்கின்றேன். முருகனருள் முன்னின்று துணைசெய்யும். உன் அன்புநிறைந்த கடிதங்காண''

விரும்பும் கமலக்கண்ணி.

கலைவாணன் கண்களில் நீர் பெருகிற்று. என்ன அன்பு? போர்வீரன் மகனாகிய என்னை அரசகுமாரி மணப்பது என்றால் இது முடிவுபெறுகின்ற காரியமா? பகற்கனவு; ஆனாலும் என் உள்ளம் அவளை மறக்கவில்லையே. அவளும் எனனை விரும்புகின்றாள். திருவருள் எப்படி விரும்புகின்றதோ?" என்று எண்ணி ஒரு கடிதமெழுதி அத்தோழியிடம் கொடுத்தனுப்பினான். அதனைக் கமலக்கண்ணி படித்து கண்ணில் ஒற்றிக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டனள்.

உலகாளும் மன்னர்குலப் பாவையே! நின் கடிதம் மெய்தியது. நான் உன்னை என் உள்ளமென்னும் திரையில் எழுதி இடையறாது காண்கின்றேன். எனினும் அபாக்யவானாகிய என்னை நீ மணக்க நின் பிதா இசைவாரா? அவர் இசையினும் அரசகுடும்பத்தார் இசைவார்களா? முருகன் இசைந்தால் எலலாம இசையும். வள்ளி மணவாளன் திருவருள் எப்படியோ?

நின் அன்பைப் பருகும் நணபன்
கலைவாணன்.

ஒருநாள் மாலை அரசன் தன் மெய்காவலனுடன் பூஞ்சோலையில் உலாவி அதன் நடுவிலுள்ள பளிங்கு மண்டபத்தின் மேடையில் படுத்து சற்று உறங்கிவிட்டனர். அரசன் தனித்திருக்கும் சமயத்தை எதிர்பார்த்திருந்த கொடிய பாதகனாகிய மந்திரி ஆங்கடைந்து மெய்காவலனை யழைத்து "அப்பா! நீ வறுமையாக இருப்பது குறித்து அரசர் உள்ளம் இரங்கி இந்த ஆயிரம் ரூபாயை உனக்குத் தருமாறு கூறியுள்ளார். இந்தா! இந்த ரூபாய் ஆயிரத்தையும் உன் வீட்டில் கொண்டுபோய் வைத்துவிட்டுவா" என்றான். மெய்காவலன் அவன் வஞ்சனையை யறியாது உண்மையென்றெண்ணி ரூபாயைப் பெற்று மகிழ்ச்சியுடன் தன் வீடு சென்றனன். உடனே மந்திரி வாளை யுருவி சிறந்த தருமகுண சீலரும், சற்குணக் களஞ்சியமும் கருணைக் கடலுமாகிய தர்மவர்மரை வெட்டுதற்கு ஓங்கினான். திடீரென்று பினபுறத்தில் ஒருவன் வந்து அவன் கையைப் பிடித்து முதுகில் ஒரு உதை விட்டனன். மந்திரி நடுங்கித் திரும்பிப் பார்த்தனன். வீரச் சிங்கம்போல் நிற்கும் இளங்காளையாகிய கலைவாணனைக் கண்டு திகைத்தான். அந்த அதிர்ச்சியில் அரசர் கணவிழித்தார்.

மந்திரி "எமது அரசர் பெருமானே! இப்பாவியாகிய போர்வீரன் மகன் தங்களைக் கொல்வதற்கு எண்ணி இவ்வாள்கொண்டு ஓங்கினான். தற்செயலாக நான் இங்கு வந்தவன் இவனை உதைத்துத் தடுத்து தங்கள் உயிரைக் காப்பாற்றினேன. தங்களைக் கொன்றுவிட்டால் தமது புதல்வியை தடையற்று மணந்து

கொல்லலாம் என்ற கெடுமதியே இச்செயலில் இவனைத் தூண்டியது" என்று சிறிதும் பதட்டமின்றி அரசன் நம்புமாறு கூறினன். அரசன் கேட்டு உள்ளங் கொதித்து "அருமை மந்திரியே! உன்னால் இன்று நான் பிழைத்தேன். இவனைக் கொண்டுபோய் காவலில் வை. பிறகு விசாரித்துச் சித்திரவதை செய்யலாம்" என்று கூறிவிட்டு தன் அரண்மனை சேர்ந்தார்.

கமலக்கண்ணி தனது பிதா முகங்கறுத்து கோபக்குறியுடன் இருப்பதை யுணர்ந்து, பிதாவின் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "அன்புள்ள ஐயா! என் தங்கள் முகம் சினக்குறியுடன் இருக்கின்றது. தாமரை நாணும் தயவுடன் கூடிய தங்கள் திருமுகம் ஒருநாளும் இப்படி யிருந்ததில்லையே? தங்கள் மாறுபாட்டிற்குக் காரணம் எனக்குக் கூறலாமா?" என்று பரிந்து கேட்டனள்.

தர்மவர்மா:— குழந்தாய்! என் உயிர் இன்று பிரிய இருந்தது. மதியில் மிகுந்த மந்திரியால் பிழைத்தேன்.

கமல:— அப்பா! என்ன? தங்கள் ஆவிபிரிய இருந்ததா? காரணம்?

தர்ம:— மகளே! காரணம் நீதான்.

கமல:— (திடுக்கிட்டு) தந்தையே! என்ன இது விபரீதம். விபரமாகக் கூறும்.

தர்ம:— அம்மா! நான் மாலை பளிங்குமண்டபத்தில் துயின்றேன். நீ விரும்பியுள்ள கலைவாணன் என்னைக் கொன்றுவிட்டால் பிறகு தடையற்று நின்னை மணந்துகொள்ளலா மென்றெண்ணி, என்னை வாளால் வெட்ட வந்தான். நல்லவேளையாக நமது மந்திரி ஆங்கு தற்செயலாக வந்தவன் அவனைத் தடுத்து என்னைக் காப்பாற்றினன். குழந்தாய் இனியாவது அவனை நீ மறந்துவிடு. மந்திரிமகனை மணந்து மகிழ்ச்சி யடைவாய்.

கமல:— அப்பா! இதில் என்னமோ சூழ்ச்சி யிருக்கின்றது. கலைவாணர் ஒருபோதும் இத்தகைய தீவினையைச் செய்யமாட்டார். தாங்கள் நம்பவேண்டாம்: ஆராய்ந்து தெளியுங்கள்.

தர்ம:—குழந்தாய்! எங்கே அதிக அன்பு செல்லுகின்றதோ அங்கே குற்றந் தோன்றாது. நீ அவனிடம் அன்பு வைத்ததனால் அவனுடைய பொறுக்கமுடியாத இந்தக் குற்றம் உனக்குப் புலனாகவில்லை. கையும் பிடியுமாகப் பிடித்தபின் வேறு சாட்சி வேண்டுமா? இனி அவனுக்கு மரணதண்டனை விதிப்பதினும் வேறு செய்வதுண்டோ?

மறுநாள் சபாமண்டபத்தில் அரசர் கலைவாணனை நிறுத்தி விசாரித்தனர்.

தர்ம:— நேற்று நீ என்ன செய்தனை.

கலை:— அரசே! திக்கற்றவர்கட்குத் தெய்வமே சாட்சி. அடியேன் சொல்லை நம்பமாட்டீர்கள். ஏழைசொல் அம்பலம் ஏறுமோ? எனினும் சர்வபூத சாட்சியாக உள்ள இறைவனுடைய திருவுள்ளத்திற்கு தெரியும். இதோ இங்கு இருமாந்துள்ள இந்த மந்திரியார் தங்களை வாள்கொண்டு வெட்டவந்தார். தற்செயலாக அவ்வழியே சென்ற அடியேன் தடுத்தேன். இவர் இப்பழியை நான் செய்ததாகக் கூறுகின்றார்.

மந்திரி:— வேந்தே! குற்றம் செய்தவன் ஒப்புக்கொள்வானு? அவன் முகத்தைப் பார்க்கும்போதே குற்றவாளி என்று தெரிகின்றதே. தங்கள் அன்னத்தைப் பல வருடங்களாக உண்ணும் அடியேன் இப்பாதகச் செயலை கனவிலும் நினைக்கமாட்டேன் என்பது தங்கள் திருவுள்ளத்திற்குத் தெரிந்ததே. இவன் போர்வீரன் மகனுதலால் எதனையும் அஞ்சாமல் செய்வான்.

ஆங்கு மந்திரியால் இலஞ்சம் வாங்கிய சிலர் "நீதி தவறுத நிருபரே! கலைவாணன் கூற்று நம்பத்தக்கதன்று" என்று பல ஆதாரங்களைக் காட்டிப் பேசினுர்கள். அரசரும் அதனை ஆமோதித்து "இந்த இராஜத்துரோகியை மூன்ருவது நாள் சிரச்சேதஞ் செய்து விடுங்கள்" இவன் தன் பாவத்தை நினைந்து வருந்தவும், இஷ்டஜனங்களைக் காணவும் தெய்வசிந்தனை செய்யவும் மூன்று நாள் தவணை கொடுத்திருக்கிறேன்" என்று கட்டளை யிட்டுவிட்டனர். கலைவாணனை விலங்கிட்டு காவலுடன் சிறையிலடைத்தனர்.

கலைவாணன்:— முருகா! மூவர்முதல்வா! என்ன காலக்கொடுமை? சத்தியத்திற்கு தண்டனையும் அசத்தியத்திற்கு ஆறுதலுமாக இருக்கின்றதே? கருணாமூர்த்தி! அரசர்பெருமானைக் காப்பாற்றப்போன எனக்கு மரணதண்டனை.! கொல்ல முயற்சித்தவனுக்குப் பாராட்டு. சுவாமீ! நீதியும் நெறியுமில்லாத இந்த ஈன உலகத்தில் இருப்பதிலும் இறப்பதே நலம். ஆயினும் உண்மை என்றைக்கும் வெளிப்பட்டே தீரும். நெருப்பை எத்தனை துணிகளால் மூடிவைத்தாலும் அது மேலெழுந்தே தீரும். அதுபோல் உள்ளம் என்ற நெருப்பை பொய் என்ற துணிகளால் மூடிவைக்கினும் பொய்த்துணியை எரித்து உண்மை வெளிப்பட்டே தீரும். மந்திரியிடம் லஞ்சம் பெற்று அவனுக்கு ஆதரவாகப் பேசும் கொடியர்களுக்கு, என்ன கதிதான் வருமோ?

கந்தா கடம்பா கதிர்வேலா உன்னடியர்
சிந்தா குலத்தாழச் செய்வோர்கள் —முந்தாது
வாக்குந் திருவாழ்வும் வையத்தி லேநீங்கி
தாக்குறுவர் நோயால் தளர்ந்து.

தஞ்சமென் றுன்னடியிற் சண்முகா வந்தடைந்தேன்
அஞ்சலென் றோர்வாக் கருளுவாய் —வஞ்சப்பேய்
உண்டாகி ஏழை உயிர்க்கிறுதி யாயிற்றே
மிண்டா ரழியவிடு வேல்.

என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

இச்செய்தியைக் கேட்ட கமலக்கண்ணி, ஆருத்துயரமுற்று, "எம்பெருமானே! ஆறுமுகத்தரசே! என் ஆருயிர் நேசனைக் காப்பாற்றியருளும். அந்தோ உன் திருவருள் சத்தியமானால் உண்மைக்கு வெற்றி கிடைக்கட்டும். இல்லையேல் கலைவாணர் செல்லும் வானுலகிற்கு நானுந் தொடர்ந்து செல்வேன்" என்று கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தாள். மந்திரி தனக்குள் ஆலோசிப்பான்: "எல்லாம் நமக்கு நன்மையாகவே முடிவு பெறுகின்றது. உலகத்திலே அறிவிலிகள் கடவுள் கடவுள் என்று கத்துகின்றார்கள். கொலை செய்யப்போன நமக்கு நன்மையும் விலக்க வந்த கலைவாணனுக்குத் தீமையுமாக முடிந்தது. கடவுள் ஒன்று இருக்குமானால் இப்படி நாம் நினைத்தபடி முடியுமா? சாமியாவது சாத்தானாவது ஒன்றுங்கிடையாது. சரி. ம்......இனி, மெய்காவலனுக்கு 1000ம் ரூபாய் தந்து வீட்டிற்கு அனுப்பினேமே அவன் ஒருவேளை அதனை அரசனிடம் கூறிவிடுவானே யாமாகில் அரசனுக்கு நம்பேரில் ஐயமுண்டாகும். ஆகவே மெய்காவலனையும் ஒழித்துவிடவேண்டும். மெய்காவலனை ஒழித்த செய்தி வெளிப்பட்டுவிட்டால் ஆபத்தாக முடியும். ஆதலால், அரசனையும் ஒழித்துவிட வேண்டும்" என்று நஞ்சினுங் கொடிய பாதகன் எண்ணினான்.

இரண்டாம்நாள் இரவு தர்மவர்மர் தன்னை யாரோ வெட்ட வருவதாகத் தீக்கனவு கண்டு அலறி எழுந்தார். "நமக்கு ஏதோ ஆபத்துஉளது. ஆதலால் நமது மகளுடைய திருமணத்தை விரைவில் முடித்துவிட வேண்டும். மந்திரி மகனைத் தருவித்து அவனுடைய குணங்களை யாராய்ந்து மகளையும் சமாதானஞ் செய்து திருமணஞ் செய்துவிடுவோம்" என்று எண்ணி, சேவகன்மூலம் மந்திரிமகனை யழைத்து, தன் படுக்கையில் இருக்கவைத்து அவன் அறிவின் திறத்தையறிய சில வினாக்கள் வினவுவார்.

தர்மவர்மர்:— அப்பா! ஒருவன் உயர்ச்சியை யடையவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

மந்திரிமகன்:— ஏணியின்மீது ஏறவேண்டும்.

தர்மவர்மர்:— (புன்னகை புரிந்து) சுகம் பெறவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

மந்திரிமகன்:— தூங்கவேண்டும்.

தர்மவர்மர்:— பேஷ்... ஒருவனுக்குப் பெருமையுண்டாக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

மந்திரிமகன்:— மனைவிக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

தர்மவர்மர்:— சபாஷ். நின் அறிவுக்கு மெச்சினேன்; அதை நீ எப்படி தெரிந்துகொண்டாய்?

மந்திரிமகன்:— எங்கப்பா எங்கம்மாவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் தெரிந்து கொண்டேன்.

தர்மவர்மர்:— சரி. சற்று இரு வருகிறேன். என்று சொல்லி, இவன் இவ்வளவு மூடசிகாமணி யாதலால்தான் நமது மகள் இவனை மணக்க இசையவில்லை" என்று எண்ணி மகள் இருக்கும் இடம் சென்றனர். மன்னர் சென்றவுடன் மந்திரிமகன் அக்கட்டிலில் சாய்ந்து நன்றாகத் தூங்கிவிட்டான்.

மன்னர்:— (மகளிடம்போய்,) "குழந்தாய்! உனக்கு விரைவில் மணம் முடிக்கவேண்டும். நீ ஒரு தக்க வரனை வரித்துக் கொள்" என்றார்.

கமலக்கண்ணி:— "பிதாவே! நான் கடல் வறண்டாலும் கற்பு கெடமாட்டேன். மனத்தாலே ஒருவனை வரித்தபின் வேறு ஒருவரையும் வரிக்கமாட்டேன்" என்றாள்.

மன்னர்:— "அம்மா! என்னைக் கொல்லவந்தவனையா நீ விரும்புகின்றனை?

கமலக்கண்ணி:— "அப்பா! அது ஒருபோதும் இல்லை. கலைவாணர் மிகவும் உத்தமமானவர். தாங்கள் அவரைப்பற்றி ஒன்றும் தவறாக நினைக்கவேண்டாம். அவருடைய நற்குணங்கள் அளவிடற் கரியன. அதனை இறைவன் தங்கட்கு உணர்த்துவார்" என்றாள்.

மன்னர் "சரி" என்று கூறிவிட்டுத் தன் படுக்கை யறைக்குப் புறப்பட்டார். அன்றிரவு மன்னரைக் கொன்று விடவேண்டுமென்று முன்னரே தீர்மானித்திருந்த மந்திரி அரசர் படுக்கை யறைக்குள் நுழைந்து விளக்[illegible]ரிவதாலும், முகம் அப்புறம் திரும்பி யிருந்[illegible] மன்[illegible]கையில் வேறு யாரும் படுக்க நியாயமி[illegible]தாலும், படுத்திருப்பது மன்ன

றென்றே எண்ணி வாளால் ஒரே வீசாக வீசி வெட்டிவிட்டு, இன்றே "என் மகனுக்கு அரசன் மகளும், அரசபதவியும் கிடைத்துவிட்டது. நான் எண்ணிய எண்ணம் நிறைவேறிவிட்டது. என்று மகிழ்ச்சியுடன் திரும்பினான். அதே சமயம் அரசர் அங்கு சென்றார் மந்திரி மன்னரைக் கண்டு அப்படியே பதுமை போல் நின்றுவிட்டான்.

அரசர் மந்திரியின் முகத்தில் ஏற்பட்ட மாறுபாட்டைக் கண்டு, படுக்கையைப் பார்த்தார். மந்திரிமகன் வெட்டுண்டிருக்கக் கண்டார். அவருக்கு விஷயம் யாவும் விளங்கிவிட்டன. "மந்திரி! என்ன செய்தனை? என்றனர். மந்திரி படுக்கையில் வெட்டுப் பட்டது யாரென்று பார்த்தான். "ஐயோ! மகனே நானே உனக்கு எமனாயினேன்" என்று கதறி வீழ்ந்து புலம்பினான். மந்திரி சிறையிலடைக்கப் பட்டான்.

மறுநாள் அரசவையில் பெருங்கூட்டம். மந்திரி, கலைவாணன் இருவரும் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

தர்மவர்மர்:— மந்திரி! உண்மையை ஒளியாமற் சொல்.

மந்திரி:— மன்னர் பெருமானே! ஆசைப்பேயால் விழுங்கப்பட்ட பாவியாகிய நான்தான் நந்தவனத்தில் தங்களைக் கொல்ல வந்தேன் கலைவாணர் தடுத்தார். பிறகு இரவு தாங்கள் படுத்திருப்பதாக எண்ணி என் மகனையே கொன்றுவிட்டேன். மனிதன் நினைத்தபடி ஒன்றும் நடைபெறாது. தெய்வம் நினைத்தபடி யாவும் நிகழும் என்பதை நன்கு உணர்ந்தேன். கலைவாணர் குற்றமற்ற குணக்குன்றம். என்னை என் மகன் போன உலகிற்கு அனுப்பிவிடுமாறு வேண்டுகின்றேன்.

தர்மவர்மர்:— "மந்திரி! உன் குற்றத்தை மன்னித்தேன். இனியாவது நீ இந்தக் கொடிய எண்ணங்களை வேருடன் களைந்து குணமடைந்து தெய்வத்தை நினைந்து உய்வு பெறுவாயாக.

ஏ மகா ஜனங்களே! என் உயிரைக் காப்பாற்றிய இக்கலைவாணனுக்கு என் மகளையும் அரசையும் பரிசாகத் தருகின்றேன்" என்றார்.

சபையில் மகிழ்ச்சியினால் ஒரே ஆரவாரம் உண்டாயிற்று. பிறகு நன்னாளில் கமலக்கண்ணிக்கும் கலைவாணனுக்கும் திருமணம் நிகழ்ந்தது. கலைவாணனுக்கு முடிசூட்டப்பட்டது. அரசபோகத்தில் கலைவாணன் இன்புறுவானாயினான். கமலக்கண்ணி உண்மையின் உயர்வையும் [illegible] முழுமுதற் கருணையையும் எண்ணி எண்ணி [illegible]டன் கருத்தொருமித்து வாழ்ந்தனள்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக்காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**
**பட்டு-சேலை தினுசுகள்**


சாயத்திற்கும் ஜரிகைக்கும்
உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**
**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.




சோல்ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது சேமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது சேமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் சேமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"சேமந்தகா வைரங்களே"

உருதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.
1-க்கு 0—8—0. 1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:—

மோதிரங்கய்ய செட்டியார் சன்ஸ்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N. A.